RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# குறுந்தொகை காட்டும் குறிஞ்சிநில உணவியல்

மா. ரோஹித்குமார் [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசு கலைக் கல்லூரி, உடுமலைப்பேட்டை, தமிழ்நாடு, இந்தியா.

# Kurunthogai Shown Kurinji Terrestrial Diet

M. Rohithkumar [a, *]

[a] Department of Tamil, Government Arts College, Udumalpet, Tamil Nadu, India

* Corresponding Author: mrohith13301@gmail.com

Received: 03-04-2024
Revised: 23-06-2024
Accepted: 01-07-2024
Published: 30-07-2024

Check for updates

**ABSTRACT**

Food is the basic need of all living beings on earth. The food list depends on the land and the habits of the people depend on the availability of food. Literary texts give us various messages from man planting food to growing it, harvesting it, ripening it and eating it. In this way, this article examines the diet of Kurinji land and the customs of the people associated with it.

**Keywords:** Diet, Ripening, Feed, Weeding, Cold (Sounding Instrument), Sonon, Incinerator, Honeycomb

## முன்னுரை

உலகில் வாழும் ஒவ்வொரு உயிருக்கும் உணவு என்பது அடிப்படைத் தேவையாக அமைகிறது. உணவு பொதுவாக இரண்டு வகைப்படும். ஒன்று செடி, கொடி முதலான தாவரங்களால் கிடைக்கும் சைவ உணவு. மற்றொன்று ஊன் என்று சொல்லப்படக்கூடிய அசைவ உணவு. ஒவ்வொரு உயிருக்கும் அது வாழும் நிலத்தின் தன்மைக்கு ஏற்ப உணவுப் பட்டியல் அமைகிறது. இவ்வுணவை சமைத்தல் என்னும் தொழிலால் பக்குவப்படுத்தி உண்டவன் மனிதன். உயிருக்கு ஆதாரமாக விளங்கும் உணவினைச் சார்ந்தே மனிதனின் பழக்கவழக்கங்களும் அமைந்தன. இக்கருத்தை இலக்கிய நூல்களும் பல்வேறு இடங்களில் சுட்டிக் காட்டுவதை அறியலாம். அவ்வகையில் குறுந்தொகை நூலில் குறிஞ்சிநிலப் பாடல்களின் வழி குறிப்பிடப்படும் உணவுகள் மற்றும் பழக்கவழக்கங்களை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## குறிஞ்சிநில உணவுகள்

மலையும் மலை சார்ந்த பகுதியுமாக விளங்கும் குறிஞ்சி நிலத்து மக்கள் தேனெடுத்தல், தினை விதைத்தல், கிழங்கு அகழ்தல், வேட்டையாடுதல் போன்ற தொழில்களின் மூலமாக தங்களுக்குத் தேவையான உணவுகளைத் தாமே தேடிக் கொண்டனர். மேலும் மலையில் இயற்கையாகக் கிடைக்கூடிய பழங்களையும் உண்டு வாழ்ந்தனர். தினை குறிஞ்சி நிலத்தின் முக்கிய உணவாக

அமைகிறது. மா, பலா, வாழை, நெல்லி முதலான கனிகளும், கிழங்கு, தேன், ஐவனம் முதலியனவும் குறிஞ்சி நிலத்தின் உணவுகளாக குறிப்பிடப்படுகின்றன.

## ஐவனம்

குறவர் இன மக்கள் மேகங்கள் தவழும் குறிஞ்சி நில மலைப்பகுதியின் பக்கங்களில் மலை நெல் என்னும் ஐவனத்தை விதைத்து வளர்ப்பர். அவ்வாறு விதைக்கப்படும் மலை நெல்லானது இயற்கையாக விழும் மலையருவியின் நீரினால் தாமாக நன்கு வளர்ந்து பயிராகிறது. இச்செய்தியை உறையூர் முதுகூத்தன் தம் பாடலில்,

"மைபடு சிலம்பின் ஐவனம் வித்தி

அருவியின் விளைக்கும் நாடு" (குறுந்.371)

என்ற வரிகளால் குறிப்பிட்டு காட்டுகிறார். இதேபோல் ஐவனம் பற்றி கபிலர் குறிப்பிடும் போது, ஐவனம் பயிரிட்ட நிலத்தில் களையாக வளர்ந்த காட்டு மல்லிகையையும் மரலையும் குறமகளிர் பறித்து எறிந்த நிகழ்வினை,

"அருவிப் பரப்பின் ஐவனம் வித்திப்

பருஇலைக் குளவியொடு பசுமரல் கட்கும்

காந்தள்அம் சிலம்பில் சிறுகுடி பசித்தென" (குறுந். 100)

என்ற பாடல் வரிகளால் குறிப்பிட்டு காட்டுகிறார்.

## பலாப்பழம்

குறிஞ்சி நில மலைப்பகுதிகளில் விண்ணைத் தொடுமாறு பல்வேறு மரங்கள் வளர்ந்து நிற்கின்றன. அவற்றுள் மனதை மயக்கும் மணமும் தேனை ஒத்த சுவையும் கொண்ட பலா குறிஞ்சிநில மக்கள் விரும்பி உண்ணும் கனி ஆகும்.

மலைப்பக்கத்தில் வளர்ந்த பலாமரங்களில் வேரிலிருந்து கொம்பு வரை பலாப்பழங்கள் தொகுக்கப்பட்டது போன்று காய்த்துத் தொங்கும் தன்மையை,

"வேரும் முதலும் கோடும் ஓராங்குத்

தொடுத்த போலத் தூங்குபு தொடரிக்

கீழ்தாழ்வு அன்ன வீழ்கோட் பலவின்" (குறுந். 257)

என்ற வரிகளில் உறையூர் சிறுகந்தனார் கூறுவதைக் கொண்டு அறியலாம்.

மணம் வீசி மனதை மயக்கும் சுளைகளை உடைய பலாப்பழங்களை குரங்குகளிடமிருந்து காக்கும் பொருட்டு அவற்றை வலைகளைப் போட்டுக் காப்பது குறவர் தம் வழக்கமாகக் கொண்டிருந்த செய்தியை,

"கலைகை தொட்ட கமழ்சுளைப் பெரும்பழம்

காவல் மறந்த கானவன் ஞாங்கர்

கடியுடை மரந்தொறும் படுவலை மாட்டும்" (குறுந்.342)

என்னும் பாடல் வரிகளால் காவிரிப் பூம்பட்டினத்துக் கந்தரனத்தனார் குறிப்பிடுகிறார்.

## தினை

குறிஞ்சி நிலத்து உணவுப் பட்டியலில் முதன்மை இடத்தைப் பிடிப்பது தினை ஆகும். குறிஞ்சி நிலப் பாடல்களில் பெரும்பான்மையாக குறிப்பிடப்படும் உணவும் தினையே ஆகும். குறிஞ்சி நில மக்கள் வாழ்வின் பெரும்பகுதி தினையைச் சுற்றியே அமைந்திருந்தது. தினையை விதைப்பதிலிருந்து அதனைக் காத்து, வளர்த்து, அறுவடை செய்வது என குறிஞ்சி நில மக்கள் தம் நாட்களை தினைக்காகச் செலவிட்டனர்.

குறிஞ்சி நில மக்கள் யாமரத்தை வெட்டி எரித்து நிலத்தை தயார் செய்து தினையை விதைத்து வளர்த்தனர் என்பதை,

"யாஅம் கொன்ற மரம் சுட்ட இயவில்

கரும்பு மரள் முதல பைந்தாட் செந்தினை

மடப்பிடித் தடக்கை அன்ன பால் வார்ப்பு..." (குறுந். 198)

என்னும் பாடல் வரிகளால் கபிலர் குறிப்பிடுகிறார்.

தினையை விதைத்த நிலத்தில் தினையோடு விளைந்த களைகளை களைக்கொட்டினால் அகற்றி தினையை நன்முறையில் வளரச் செய்வர் குறிஞ்சி நில மக்கள் என்னும் செய்தியை,

"கடவை மிடைந்த துடவைஅம் சிறுதினைத்

துளர்எறி நுண் துகள்" (குறுந்.392)

என்று குறிப்பிடும் தும்பிசேர் கீரனாரின் வரிகள் குறிஞ்சி நில மக்கள் தங்கள் வாழ்விலும் தேவையற்ற களைகள் சேர அனுமதிக்கமாட்டார்கள் என்பதை நினைவூட்டுகின்றன.

தினை நன்கு பால்முற்றி வளரும் காலத்தில் அதனை மேய வருகின்ற கிளிகளை விரட்ட குறமகளிர் "குளிர்" என்னும் ஒலிக்கும் கருவியை தம் கைகளில் வைத்திருந்தனர் என்பதை,

"சாரல் பிடிக்கைஅன்ன பெருங்குரல் ஏனல்

உன்கிளி கடியும் கொடிச்சிகைக் குளிரே

சிலம்பின் சிலம்பும் சோலை" (குறுந். 360)

என்னும் பாடல் வரிகளில் மதுரை ஈழத்துப் பூதன் தேவனார் குறிப்பிடுகின்றார்.

அதேபோல், தினையை மேய வருகின்ற விலங்குகளை விரட்ட குறவன் தினைப்புனத்தில் பரண் அமைத்து தினையைக் காத்தான் என்ற செய்தியை,

"ஏனல்அம் சிறுதினை காக்கும் சேணோன்

நெகிழியின் பெயர்த்த நெடுநல்யானை

மீன்படு சுடர்ஒளி வெரூஉம்..." (குறுந். 357)

என்ற வரிகளில் கூறும் கபிலர், குறவன் பரண் மேல் இருந்து எரிகொள்ளி வீசி யானையை விரட்டும் பழக்கம் உடையவன் என்பதைக் குறிப்பிடுகிறார்.

குறிஞ்சி நிலத்து மக்கள் தாங்கள் விளைவித்த புதிய தினையை தெய்வத்திற்கு படையல் இட்டு வணங்கும் வழக்கம் உடையவர்கள் என்பதை நக்கீரனார்,

"புனவன் துடவைப் பொன்போல் சிறுதினைக்

கடிஉண் கடவுட்கு இட்ட செழுங்குரல்" (குறுந்.105)

என்ற பாடல்வரிகளில் குறிப்பிடுகின்றார்.

## இறைச்சி உணவு

குறிஞ்சி நிலமாகிய மலைப்பகுதிகளில் வாழ்ந்த மக்கள் தங்கள் உணவுக்காக வேட்டைத் தொழிலையும் மேற்கொண்டனர். இதனை ஒருசிறைப்பெரியன் என்ற புலவர் தம் பாடலில் குறிப்பிடும்போது,

"நனந்தலைக் கானத்து இனம் தலைப்பிரிந்த

புன்கண் மடமான் நேர்ப்பட, தன்னையர்

சிலைமாண் கடுவிசைக் கலைநிறத்து அழுத்திக்

குருதியொடு பறித்த செங்கோல்" (குறுந்.272)

என்று கூறுகிறார். பெண்மான் தனித்து நின்று பார்த்திருக்க ஆண் மானின் மருப்பத்தை அம்பினால் துளைத்து அழுத்தி உதிரத்தோடு பிடுங்கும் தன்மை உடையவர்களாக குறிஞ்சி நில மக்கள் விளங்கினர் என்பதிலிருந்து வேட்டையாடுவதில் அவர்களின் வன்மைக் குணத்தையும் அறிய முடிகிறது.

## பிற உணவுகள்

இவை தவிர தேன், கிழங்கு, வாழை முதலானவையும் குறிஞ்சி நில மக்களின் உணவுகளாக விளங்கின. குட்டுவன் கண்ணனாரின் ஒரு பாடலில் வரும்,

"ஓங்குவரை அடுக்கத்துத் தீம்தேன் கிழித்த" (குறுந்.179)

என்ற வரியிலிருந்து, ஓங்கி உயர்ந்த மூங்கில் தேனடைக் கிழித்ததனால் தேன் சொட்டும் செய்தியையும்,

பெருந்தோட் குறுஞ்சாத்தனார் ஒரு பாடலில்,

"சோலை வாழைச் சுரிகும்பு இனைய" (குறுந். 308)

என்று குறிப்பிடும் வரியிலிருந்து வாழை மரங்கள் அடர்ந்து வளர்ந்திருந்த செய்தியையும் கொண்டு தேனும் வாழையும் குறிஞ்சி நில மக்களின் உணவாக அமைந்திருந்தன என்பதை அறியலாம்.

## முடிவுரை

நிலத்தின் தன்மைக்கு ஏற்ப உணவும், உணவைச் சார்ந்து அங்கு வாழும் மனிதர்களின் பழக்கவழக்கங்களும் அமைந்தன. மலைகளில் வாழ்ந்த குறிஞ்சி நில மக்கள் இயற்கையாக கிடைக்கும்

தேன், பலா, வாழை, கிழங்கு முதலானவற்றோடு தினை, ஐவனம், அவரை முதலான தானியங்களை விளைவித்தும் தங்களுடைய உணவைப் பெற்றுக் கொண்டனர்.

தாவரங்களால் கிடைக்கும் சைவ உணவுகள் மட்டுமின்றி மான் முதலான சிறுசிறு காட்டு விலங்குகளை வேட்டையாடிக் கிடைக்கும் இறைச்சி போன்ற அசைவ உணவுகளையும் தங்கள் உணவுப் பட்டியலில் சேர்த்துக் கொண்டனர்.

விவசாயத்தின் போது மறுகால் விளைவிக்கும் அறிவு நுட்பமும், வேட்டையாடும் போது வன்மையான முறையில் விலங்குகளை வேட்டையாடும் தன்மையும் உடையவர்களாக குறிஞ்சி நில மக்கள் விளங்கினர் என்பதையும் அறியலாம். இக்கட்டுரையின் வாயிலாக நிலத்தின் தன்மைக்கு ஏற்ப உணவைச் சார்ந்து மக்களின் பழக்கவழக்கங்களும் அமைந்திருந்தன என்பதை அறிய முடிகிறது.

## References

டாக்டர்.உ.வே.சாமிநாதையர் (உ.ஆ.), குறுந்தொகை மூலமும் உரையும், டாக்டர். உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், எண்.2, அருண்டேல் கடற்கரைச் சாலை, பெசன்ட் நகர், சென்னை - 600 090, முதல்பதிப்பு - 1937, எட்டாம் பதிப்பு - 2020.

சக்திதாசன் சுப்பிரமணியன் (உ.ஆ.), செவ்விலக்கியக் கருவூலம் (குறுந்தொகை), தமிழ்மண் அறக்கட்டளை, தியாகராயர்நகர், சென்னை - 600 017, முதற்பதிப்பு - 2008.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2024. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License